# "இட்லர் ஆட்சிபோன்றதே இன்றைய காங்கிரஸ் ஆட்சியும்!"

## ஒரேகட்சிஆட்சிநிலவுவது ஜனநாயகமாகாது

## மக்களின் உரிமைகள் மாஜிஸ்டிரேட்கள் கையிலா?

## மாற்றுக் கட்சிகளை மட்டந்தட்ட நினைப்பது அடாது

## இன்றைய ஆட்சிமுறையில் யதேச்சாதிகாரம் வளர்க்கப்படுகிறது

### முன்னாள் நீதிபதி பி. ஆர். தாஸின் கண்டனக் கணைகள்

"ஜெர்மனியில் ஹிட்லரும் இத்தாலியில் முசோலினியும் நடத்திய ஒரே கட்சி ஆட்சிமுறை, இந்தியாவிலும் இடம் பெற்றுவிட்டது. இம்மாதிரி ஒரே கட்சி ஆட்சி நிலவுவது ஜனநாயக ஆட்சியாகாது.

இன்றையதினம் அரசியலார் அனுமதியின்றி. கூட்டம் கூட்ட முடிவதில்லை.

மாற்றுக் கட்சிகளெல்லாம் அடக்கப்படலாம் என்ற பயம் இருந்து வருகிறது.

நாட்டு மக்களின் உரிமை ஒரு சாதாரண சப்-டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கையில் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையில், இந்திய மக்களாகிய நாம் சுதந்திரக் குடியரசை அமைத்துவிட்டோம் என்று சொல்லுவது பொருந்தாது.

இன்று இந்திய அரசியல் திட்டம் அமுல் நடத்தப்படும் முறையைப் பார்த்தால், காங்கிரஸ் ஒரு சர்வாதிகார கட்சியாக ஆகிக்கொண்டு வருகிறது என்பதையே காட்டுகிறது. எனவே, இன்றையதினம் ஜனநாயகக் கட்சி ஒன்று மிக மிக அவசியமாகத் தேவைப்படுகிறது."

அனைத்திந்திய ஜனநாயகக் கட்சி மாநாடும், ஜ. மா. ஜமீன்தார்கள் மாநாடும் அண்மையில் லக்னோவில் நடைபெற்றபோது, அம்மாநாடுகளின் தலைவராக இருந்த பாட்னா உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி தோழர் பி. ஆர். தாஸ், மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

கருத்துக்கள் நல்ல கருத்துகளே. வரவேற்கப்பட வேண்டியவையுங்கூட. ஆனால், காங்கிரஸ் ஆட்சிமுறையின் அலங்கோலங்களைக் குறித்து, இங்ஙனம் அடிக்கடிப் பேசப்படும் பேச்சுகள் பல என்பதை ஈண்டு நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

காங்கிரஸ் ஆட்சி முறை யதேச்சாதிகார ஆட்சியாக இருக்கிறது. இந்த ஆட்சி முறைக்கு ஜனநாயக மருந்து தேவை, இன்றேல் நாடு நலம் பெறாது. இதுதான் அந்த முன்னாள் நீதிபதி கூறும் கருத்துரைகளின் சாரம்.

இந்தச் சரக்குகள் நமக்கோ நாட்டுக்கோ புதியவையல்ல. ஜனநாயகம் பற்றிப் பேச மேடையேறிய மேதைகள் அத்தனைபேரும் இதைத்தான் கூறிவருகின்றனர். அதிலும், 'காங்கிரஸ்' ஆட்சிப்பீடமேறியநாள்முதல் இந்த ஜனநாயக உபதேசமும் தத்துவ விளக்கமும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

காங்கிரஸ் ஆட்சி-ஒரு சர்வாதிகார ஆட்சியாக மாறி வேறுசிலர்! இப்படிச் சொல்லுபவர்களில் காங்கிரசார் கொகையே அதிகம். காங்கிரசில் பெரிய தலைகள் என்று கருதப்படுவோரில் பெரும்பாலோர், இப்பணியை மேற்கொள்ளத் தவறுவதில்லை. ஆனால் இவ்வளவு கண்டனம், கருத்துரை, ஜனநாயக உபதேசம் இன்ன பிறவற்றுக்கிடையேதான் காங்கிரஸ் யதேச்சதிகார ஆட்சி என்னும் பயிரும் வளமாக வளர்ந்து வருகிறது!

இதற்குக் காரணம் என்ன? இதுதான் சிந்திக்க வேண்டிய விஷயம். காங்கிரஸ் ஆட்சியின் யதேச்சதிகாரப் போக்கு கண்டிக்கப்படுகிறதே யன்றி, கண்டனத்தில் உயிர் இல்லை என்பதையே காட்டுகிறது இந்நிலை.

கண்டனம் என்றால், கண்டிக்கப்படுபவரின் உள்ளத்தில் அச்சத்தை விதைக்கக் கூடியதாயிருத்தல் வேண்டும்; அந்த அச்சம் அவர் தம் ஆணவத்தை அழிக்கக் கூடியதாய் இருத்தல் வேண்டும். அந்த ஆணவஒழிப்பு அறியாமையை அகற்றி, அறிவை வளர்க்க கூடியதாய் அமையவேண்டும் "நான் அடிப்பது போல் அடிக்கிறேன், நீ அழுவதுபோல் அழு" என்ற கதை போல, இருக்கக்கூடாது கண்டிக்கும் முறை; குற்றங் குறைகளை காரணமாகக் காட்டி கண்ட

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

Phone No 4502

விலை அரை அணா

Regd. No. M. 5458

இலங்கை 5 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAIMANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (16—5—50) வெளியூர் (17—5—50) [ இதழ் 253

## செஞ்சீனா-ரஷியா தொடர்பு அதிகரிக்கிறது

### ரஷியாவுடன் சீன ரயில்பாதை இணைக்கப்படுகிறது

ஹாங்காங், மே 14—

வட மேற்கு சீனாவில் புதிய ரயில் பாதை ஒன்றை அமைக்கும் பணியில் 25,000 சீன படைவீரர்கள் ஈடுபட ஆரம்பித்துள்ளனர் என்றும், இந்த ரயில்பாதை சீனாவையும், ரஷியாவையும் இணைக்கவல்ல முதல் ரயில்பாதையாகும் என்றும் இன்று பீகிங் வானொலி அறிவித்தது.

இப்புது ரயில்பாதை 150 மைல் நீளமிருக்கும் என்றும், கான்சு மாகாணத் தலைநகரான லான்சவ்வுடனும், சீனாவின் மற்ற ரயில்பாதைகளுடனும் தீன்ஷி வழியாக இணைக்கப்படுமெனறும் சொல்லப்படுகிறது.

இந்தப் புதிய ரயில்பாதை அமைக்கப்பட்டுவிட்டால் தற்போது உள்ளதைவிட ரஷியாவுடன் அதிகத்தொடர்புடைய ஒரு நேர்பாதையாக விளங்கும் என்றும் கருதப்படுகிறது.

### மாஸ்கோவில் டிரிக்வ்லி

செய்ரோ, மே 13—

ஐ. நா. பொதுச் செயலாளர் தோழர் டிரிக்வ்லி நேற்று சோவியத்அயல்நாட்டு அமைச்சர் தோழர் ஆண்டிரு விஷின்ஸ்கியைச் சந்தித்தார். இன்று உதவி அயல்நாட்டு அமைச்சர் ஆண்டிருகிரமிகோவைச் சந்தித்துப் பேசினார்.

### பிடி இறுகும்!

கூடிய சீக்கிரத்தில் இந்தியாவின் எல்லாப் பகுதிகளும், ஏறக்குறைய ஒரேவிதமான சட்டதிட்டங்களால் ஆளப்படும்

—சர்தார் பட்டேல்

## 'மாலைமணி', 'திராவிடநாடு' மீது சென்னை கல்வி இலாகா பாய்ச்சல்

——————(0)——————

### கடலூர் நகராண்மைக் கழகப் படிப்பகங்களில் படிக்கத் தடை

'மாலைமணி', 'திராவிடநாடு', 'விடுதலை' தாள்களை, கடலூர் முனிசிபல் படிப்பகங்களில் படிப்பதைச் சென்னை சர்க்கார் தடை செய்துள்ளது. மாகாணக் கல்வி அதிகாரி கடலூர் நகராண்மைக் கழக அலுவலகத்திற்கு நம் கழகப் பத்திரிகைகளைப் படிப்பகங்களில் உபயோகிக்கக் கூடாதென்று தடை விதித்து உத்திரவு பிறப்பித்ததின்பேரில், 'மாலைமணி', 'திராவிடநாடு' ஆகிய இரண்டு தாள்களையும் நிறுத்திவிடும்படி மாலைமணி அலுவலகத்துக்கும்; திராவிடநாடு அலுவலகத்துக்கும் கடலூர் நகராண்மைக் கழகம் அறிவித்துள்ளது.

நம் காரியாலயத்துக்கு ஆங்கிலத்தில் கிடைத்த உத்திரவு கீழே அப்படியே கொடுத்திருக்கிறோம்.

Roc. No. C. 1. 3561/50

Municipal Office, Cuddalore,
Dated: 9-5-50

To

Sri C. N. Annathurai M. A.,
Editor, MALAIMANI, Madras 1

Sir,

Sub:- Books and publications supply of MALAIMANI and VIDUTHALAI Discontinuance of-

Ref:- Rc. No 182 J 500/31-3-50 of the Director of Public Instruction Madras received in this office on 19-4-50

The Supply of MALAIMANI, DRAVIDA NADU and VIDUTHALAI to the Municipal Libraries and Reading Room are discontinued with effect from 20-4-50. You are requested to stop the supply of the above papers to the Municipal Reading Rooms and Library with effect from 20-4-50.

Sd/-L. C. Richard,
Commissioner.

# மாலை மணி

சென்னை 16—5—50 செவ்வாய்க்கிழமை


# சர்தார் சரடு!

ஏர்ணுகுளத்தில் சர்தார் பட்டேல் செய்த சொற்பொழிவைச் செய்தித்தாள்களில் படிக்கும் சென்னை மக்கள், அன்று ஜிம்கானு மைதானத்தில் பேசிய பட்டேல் வேறு, இன்று எர்ணுகுளத்தில்பேசும் பட்டேல்வேறு என்ற முடிவுக்குத்தான் வரமுடியும்.

"மக்களுக்காகவே ஆட்சி, ஆளவந்தவர்கள் திறமையற்றவர்களாக இருந்தால், சர்க்காரைத் திருத்தவோ மாற்றியமைக்கவோ மக்களுக்கு உரிமையண்டு" என்று பேசியது சென்னையில்! அன்று அவர் சொற்பொழிவைக் கேட்டவர்கள், முற்போக்குப் பத்திரிக்கைகள் பட்டேலைப் பற்றிக் கூறிவந்த உண்மைகளை யெல்லாம் பொய்ப் பிரசாரம் என்றே எண்ணிவிட்டிருப்பார்கள். என்று இவ்வாறு மாறிவிட்டாரென்று இடதுசாரியினர்கூடத் திகைப் படையும்படி அவ்வளவு முற்போக்குக் கருத்துக்கள் நிறைந்ததாக இருந்தது அவர் பேச்சு. ஆனல் உண்மை 'சர்தார்' மாறவில்லை; ஏதோ சென்னை அவருக்குக் கிலி தந்திருக்க வேண்டுமென்பதையும் அவருடைய சுயரூபம் என்ன என்பதையும் கேரளத்தில் ஒலித்தசர்தாரின் ஆணவ தொனிஎடுத்துக் காட்டுகிறது.

மொழிப்பிரச்சினை, கம்யூனிஸ்டுகள், மத்திய அரசாங்கத்தின் பலம், ஹிந்துமதத்தின் சாரம், இந்திய அரசியலமைப்பு, காங்கிரஸின் பெருமை ஆகிய இன்றுள்ள பிரச்னைகள் அவ்வளவையும் அலசிவிட்டார்தோழர்பட்டேல். அரசியலைப்பற்றியும், காங்கிரஸைப்பற்றியும் அவர் கூறியுள்ளதே அதிக ருசிகரமாக உள்ளது!

இந்தியா சீனுவல்ல, பலம் பொருந்திய மத்திய சர்க்காரை நாம் அமைத்திருக்கிறோம். அவசியமேற்பட்டால், மக்களை ஒடுக்க பலத்தை உபயோகிக்கத் தயங்கமாட்டோம்" என்று கூறுகிறார் மத்திய சர்க்காரின் உதவிப்பிரதம மந்திரி பட்டேல். இந்தியா ஒரு உபகண்டத்துக்கு ஒப்பானது மாகாணங்கள் தனி நாடுகளைப் போன்று இயங்குவதால், மத்திய சர்க்கார் ஒரு சமஷ்டி சர்க்காராகவே நிலவேண்டுமென்று, நாட்டில் கூறிவருவதெல்லாம் வீண் பேச்சு என்பதைப் பட்டேல் கூறிவிட்டார். மாகாணங்களில் மந்திரி சபைகள் இருந்தாலும், அவர்கள் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அவர்களை ஆட்டிப்படைப்பவர்கள் நாங்கள்தான். அது அவர்களுக்கு [illegible]மையில் பிடிக்கவில்லை என்று கூறுகிறார் சர்தார்.

"இந்தியா என்றும் ஒன்றுபட்ட நாடாக இருந்ததில்லையென்றுதான், வரலாறு கூறுகிறது. ஆனல் இன்று அது ஒன்ருக உள்ளது; துண்டுகளாகச் சிதறிப்போக விடமாட்டோம்" என்று தோழர் பட்டேல் கூறும்போது, திராவிடநாடு தனிநாடாக வேண்டுமென்ற எண்ணம் திராவிட மக்களிடையே வளர்ந்து வருகிறதென்பதை உணர்ந்தே தவிர வேறல்ல. வடநாடு வேறு, தென்னுடு வேறு. அவைகளின் கலாசாரத்தில் சிறிதும் ஒற்றுமைகிடையாதென்பதை அன்ருடவாழ்க்கை விளக்குகிறது. ஒண்டி வாழ்வது இயலாத காரியம் என்பதை, மக்கள் உணர்ந்து விட்டார்கள் பஞ்சநிலை ஏற்பட்டு, மக்கள் பசியால் துடிக்கும் நேரத்தில் அவர்களுக்கு அதிகமாக உள்ள அரிசியை இனமாகக் கொடுக்கவில்லை. நியாயமான விலைக்காவது கொடுத்தார்களாவென்ருல், அதுவும் கிடையாது. கள்ளமார்க்கெட் விலையைவிட அதிகவிலை கேட்டார்கள் வடநாட்டார். வாழ முடியுமா இவர்களுடன்? 'தனித்துப்போக விரும்புகிருேமென்று மக்கள் வாக்களித்தால்கூடவிட மாட்டோம், ஆயுதபலம் உள்ளது வடக்கியாவது வைத்துக்கொண்டிருப்போம்' என்று மார்தட்டுகிருர். காங்கிரசின் பலம் குறைந்துள்ள சென்னையில், அடிபணிவது போன்று பேசுவது மற்ருேரிடத்தில் சென்று மிரட்டுவதுபோன்ற இழிச்சொல்பேசுவது 'இடுப்புத்தலை படைத்தவர்' என்றுகாங்கிரஸ்காரர் புகழும் சர்தாருக்கு உகந்ததல்ல.

இனஉணர்ச்சி பெற்றுள்ள திராவிட மக்களை வீணுகப் புரட்சி செய்யத்தூண்டிவிட்டு, அடக்கமுடியாமல் அவதிப்பட வேண்டாமென்று சர்தாரை எச்சரிக்கிருேம்.

இல்லாததொன்றை இருக்கிறதென்றும், நடக்காததொன்றை நடக்குமென்றும் கூறுவது, அரசியலில் ஈடுபட்டுள்ளோர் கையாளும் தந்திரமாகும். இதையொட்டித் தான்காங்கிரஸ் பலம் பொருந்தியதாக இருக்கிறது. அக்கட்சியால் அமைக்கப்பட்டுள்ள சர்க்கார் அசைக்கமுடியாத பலம் கொண்டுள்ளது என்றெல்லாம் சர்தார் சரடு விடுகிருர்போலும்! உத்திரப்பிரதேச சர்க்கார் அரிசிக்கு அதிக விலைகேட்கிறதென்றுசென்னை சர்க்கார், மத்திய அரசாங்கத்திடம்பிராது செய்தபோது நாங்கள்ஒன்றும் செய்யமுடியாதென்று மத்திய சர்க்கார் கூறிவிட்டதே! மாகாண சர்க்காரின் பேச்சை மாற்றிச் சொல்லமுடியாத மத்திய சர்க்கார், பலம் பொருந்தியதாக உள்ளது என்று கூறுவது எப்படிப்பொருந்தும்?

காங்கிரஸ் சீரழிந்துவிட்டது, கலைத்து விடுவதே நல்லதென்று பலகாங்கிரஸ் தலைவர்கள் கூறிவரும் இந்நாளில், காங்கிரஸ் பலம் பொருந்தியதொரு கட்சி, வருகின்ற தேர்தலில்மற்றக்கட்சிகளை இருக்குமிடம் தெரியாமல் நசித்து விடுமென்று சர்தார் கூறுவது, நாட்டின் நிலைமையை அவர் நன்கு உணர்ந்து கொள்ளவில்லையென்பதை எடுத்துக்காட்டுவதோடு. சர்தாரின் பகற்கனவைப் பலிக்க வைக்க மற்றக் கட்சிகள்மீது அடக்குமுறைப்பாணம் எந்த அளவுக்குப்பாய்ச்சப்படுமென்பதை ஓரளவுக்கு எடுத்துக் காட்டுகிறது.

## போரே அவர்கள் நோக்கம்

லண்டன், மே 14—

"லண்டனில் நடைபெறும் மூன்று அயல்நாட்டு மந்திரிகள் மாநாடு, அடுத்துப் புதியதோர் போருக்கு அச்சாரம் போடும் திட்டமாகும்" என்று, மூவர் மாநாட்டைப் பற்றிய கருத்தைத் தெரிவிக்கையில் இன்று மாங்கோ ரேடியோவில் செய்தி அறிவிப்பாளர் கூறினர். அவர் மேலும் பேசுகையில் "அமைதியை விரும்புவதாகப் பறைசாற்றித் திரியும் மேற்கு ஆசியாளர்கள், யாரையும் ஏமாற்றிவிட முடியாது. போருக்குத் தயாராவதே அவர்கள் உள்நாடு, வெளிநாட்டுக் கொள்கையாகும்" என்று கூறினர்.

## காஷ்மீர் வாக்கெடுப்பு

ராவல்பிண்டி, மே 15—

இப்பொழுதுள்ள ஏற்பாடுகளின்படி நடந்தால் காஷ்மீரில் பட்சபாதமற்ற பொது ஜன வாக்கெடுப்பு நடைபெற முடியும் என்றும், இதற்கான ஏற்பாடுகளை அட்மிரல் நிமிட்ஸ் செய்துவருகிறார் என்றும், வாக்கெடுப்பு ஆறே மாதத்தில் முடிந்துவிடும் என்று ஆஸாத் காஷ்மீர் தலைவர் இப்ருஹிம் கூறினர்.

இப்பொழுது கோட்டுள்ள சட்டப்படியே எல்லாக் காரியமும் நடைபெறும் பட்சத்தில், இன்னும் 12 மாதங்களின் அவருடைய 'சர்க்கார்' ஸ்ரீநகரில் ஏற்பட்டுவிடும் என்று அவர் கூறினர்.

## அரை அங்குல கப்பல்!

### எலிஸபெத் இளவரசியின் குழந்தைக்குப் பரிசு

லண்டன், மே 15—

எலிஸபெத் இளவரசியின் குமாரன் குழந்தை சார்லஸுக்கு அரை அங்குல அளவுள்ள கப்பல் ஒன்றை கடற்படை அதிகாரி ரோமாண்ட் பிரிக்ஸ் என்பவர் செய்து பரிசாக அளித்திருக்கிறார்.

## வின்னிபெக் நகரில் வெள்ளத்தால் சேதம்

### மக்கள் வெளியேற்றம்

ஆட்டவா, மே. 15—

கனடா நகரமான வின்னிபெக்கில் வெள்ள நிலைமை இன்னும் மோசமாகிக்கொண்டே வருகிறது. இதுவரை சமார் 60,000 பேர் நகரைவிட்டு வெளியேறிவிட்டனர். சமார் 3000 வீடுகள் தண்ணீருக்குள் மூழ்கிவிட்டன. அதிகள் பிரச்னை பெரும் பிரச்னையாகப் போய்விட்டது. இன்னும் மூன்று அடி தண்ணீர் அதிகமானுல் மின்சார சக்தி அடியோடு நின்று விடும்.

# ஜப்பானியர் படையெடுப்பால் ஏற்பட்ட அமைதியின்மை

## கம்யூனிஸம் பரவ சாதகமாக இருக்கிறதாம்!

லண்டன், மே 15—

இந்தோ-சீனுவுக்கு அடுத்தபடியாக கம்யூனிஸ்டு ஆபத்து ஏற்படக்கூடிய பிரதேசம் பர்மாதான் என்றும், பர்மா சீன கம்யூனிஸ்டுகள் வசமாகிவிட்டால ரஷ்ய விமானங்களும், சப்மரீன்களும் வங்காளவிரிகுடாவில் தலைகாட்ட ஆரம்பித்துவிடும் என்றும், இதைத் தடுப்பதில் கிழக்கிலுள்ள காமன்வெல்த் நாடுகள் சிரத்தைக் காட்டவேண்டியது அவசியமென்றும், லண்டன் டைம்ஸில் 'ஸ்ருேடேட்டர்' எழுதியிருக்கிருர்.

தென்கிழக்கு ஆசியாவின் பாதுகாப்பு விஷயத்தில் அமெரிக்கா காட்டும் சிரத்தையை இவர் வரவேற்றிருக்கிருர்.

அவர் எழுதியிருப்பதாவது: தென்கிழக்கு ஆசியாவில் கம்யூனிஸ்டு கண்ணேட்டத்திலுள்ள நாடுகள் பிலிப்பைன், இந்தோனேஷ்யா, சயாம். பர்மா, மலேயா இவைகளே. இதில் ஸயாம்தவிர, மற்றவை ஜப்பானியரால் சென்ற யுத்தத்தில் பிடிபட்டவை. ஆகவே, அங்கு இந்தியா, இலங்கை, பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள அமைதியானவகையில் சர்க்கார் அமையமுடியவில்லை.

'பர்மாவில் ஜப்பானியர்கள் விதைத்த அமைதியின்மை செடிக்கு, ரஷ்யர்கள் தண்ணீர் ஊற்றிவருகின்றனர். இந்த நிலைமையைச்சீர்படுத்த தென கிழக்கு ஆசியநாடுகளிடையே ஒத்துழைப்பும், அமெரிக்கா போன்ற நாடுகளின் உதவியும் மிக மிகத்தேவை."

## தென் மொலுகஸ் போராட்டம்

### ராணுவ நடவடிக்கை எடுக்கப்படும்

ஜாக்ரதா, மே. 18—

சுதந்திரப் பிரகடனம் செய்திருக்கும் தென் மொலுகஸ் மீது, இராணுவ நடவடிக்கை எடுக்கப்படுமென்று பாதுகாப்பு இலாகா அதிகாரி ஒருவர் கூறுகிருர். அவர் மேலும் கூறியதாவது;—

தென்மொலுகஸ் பிரச்னையைத் தீர்க்க கையாளப்பட்ட அமைதியான முறைகளெல்லாம் பயனற்றுப்போயின. எனவேதான், இராணுவ நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கிறது."

ஏப்ரல் 26-ல் சுதந்திரப் பிரகனம் செய்யப்பட்டதென் மொலுகஸ் இந்தோனேஷிய ஐக்கிய நாடுகளுடன் எத்தகைய தொடர்பும் வைத்துக்கொள்ளாமல் சுதந்திரப் பிரகடனம் செய்திருக்கிறதாம்.

## வெட்டுக்கிளி தொல்லை

அம்மான், மே. 15—

மத்யக் கிழக்கில் ஏற்பட்டுள்ள வெட்டுக்கிளிப் படையெடுப்பு தொல்லை ஒழிப்பதில் எகிப்து ஜார்டன் சர்க்கார்கள் கூட்டு முயற்சிகளை எடுத்துவருகின்றன.

வட அரேபியாவில் அகாபா நோக்கி வெட்டுக்கிளி படையெடுப்பு ஏற்பட்டிருப்பதாக ஐ. நா. அதிகாரிகள் கூறுகின்றனர்.

## கனடாவில் வெள்ளக் கொடுமையுடன் டைபாயிட் தொல்லை

மிகக் கடுமையான வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்ட கனடா நகரான வின்னிபெக்கில், இப்பொழுது டைபாயிட் ஜுரம் பரவி வருகிறது.

குடிதண்ணீர், சாக்கடை தண்ணீருடன்கலந்துவிட்டதே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

தென்மனிடோபாவைச் சேர்ந்த 500 சதுரமைல் பிரதேசம் வெள்ளத்தில் மூழ்கிவிட்டது. வின்னிபெக்கில் மின்சார, தண்ணீர் நிலையங்களின் சப்ளைக்கும் ஆபத்து ஏற்பட்டால் வின்னிபெக் பூராவையுமே காலிசெய்யவேண்டியிருக்கும்.

## கிழக்கு ஜோர்டான் நிர்வாகம்

### ஏற்றுக்கொள்ள அப்துல்லா மறுப்பு?

கெய்ரோ, மே 15—

அரபுலீகின் அரசியல் கமிட்டியின் இரண்டாவது கூட்டம் மிகவும் காரசாரமான விவாதத்தில் முடிந்ததென்றும், கமிட்டி தெரிவித்துள்ள யோசனைக்கு அப்துல்லா மன்னர் அனுப்பியுள்ள பதில் திருப்திகரமாக இல்லை என்றும் கூறப்படுகிறது.

கிழக்கு ஜோர்டானைத் தர்மகர்த்த பொறுப்பில் தற்காலிகமாக வைத்துக்கொள்ளும்படி இக்கமிட்டி அப்துல்லாவுக்கு அறிவித்திருந்தது.

அரபுலீக் காரியதரிசி ஜெனரல் தோழர் அஸ்ஸாம் பாஷா இதுபற்றி குளோப் நிருபரிடம் தெரிவிக்கையில், மன்னர் அப்துல்லாவின் பதிலில் புதிதாக எதுவும் இல்லை என்று கூறினர்.

இதுவரை நிலைமை மூடுமந்திரமாகவேஇருந்துவருகிறது.

இப்பொழுதுள்ள குழப்பமான நிலைமையில், எகிப்து லீகிலிருந்து வெளியேறிவிடுமா என்று கேட்கப்பட்டதற்கு, எகிப்து அயல்நாட்டு மந்திரி முகம்மது போலேஎல்தின் பதிலளிக்கையில், அத்தகைய கேள்விகளுக்கு இப்பொழுது அவசியமில்லை என்று கூறினர்.

## இனி நடப்பவை

சென்னை:— கோமளீஸ்வரன் பேட்டை முன்னேற்றக்கழகத்தின் வாராந்திர குறள் வகுப்புக்கூட்டம், 17—5—50 அன்று மாலை 7 மணிக்கு நடைபெறும், அதுபோது தோழர் ஆர். நடேசனார் 'புலன் மறுத்தல்' என்பது பற்றிப்பேசுவார்.

## லண்டன்தான் அதிக மக்கள் உள்ள நகர்

லண்டன், மே. 15—

உலகிலுள்ள பெரிய நகரில் வசிப்பவர்கள் தாங்கள்தான் என்று, நியூயார்க் நகரவாசிகள் பெருமையடித்துக்கொண்டுவந்தனர் என்றும், அவர்கள் இப்பொழுதுள்ள நியூயார்க் ஜனத்தொகை புள்ளி விவரத்தைக் கவனித்தால் அதிர்ச்சியடைந்துவிடுவர் என்றும், யுனைடெட்ஸ்டேட்டிலுள்ள பிரிட்டிஷ் நிபுணர்கள் கூறுகிருர்கள்.

நியூயார்க் ஜனத்தொகை 7750000க்கு மேற்பட்டதல்லவென்றும், விசால லண்டன் ஜனத்தொகை கிட்டத்தட்ட 9000000 பேர்களாகும் என்றும் கூறப்படுகிறது.

## கொலைகார மனப்பான்மை

### குழந்தை பருவத்திலேயே கண்டுபிடிக்கலாம்

லண்டன், மே 15—

கொலைகார மனப்பான்மையிருப்பதை குழந்தை பருவத்திலேயே வெளியில் கண்டுபிடித்துவிடலாம் என்று சிறுவர் சீர்திருத்த நிபுணர் டாக்டர் எட்வர்ட் கலோவர், தூக்குத் தண்டனை அவசியமா, அவசியமில்லையா என்கிற விஷயம்பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள ராயல் கமிஷனுக்கு சமர்ப்பித்துள்ள ரிப்போர்ட்டில் குறிப்பிட்டிருக்கிறார்.

## பாக்கிஸ்தானை எதிர்த்துப் பிரசாரம்

குவெட்டா, மே. 15—

பாக்கிஸ்தானை எதிர்த்து விரோதமான கொள்கையையே ஆப்கானிஸ்தான் கடைப்பிடித்துவருவதாகவும், பாகிஸ்தானைச் சேர்ந்த கலாட் சமஸ்தானத்தை எதிர்த்து ரேடியோ மூலம் துஷ் பிரசாரம் செய்து வருவதாகவும் பாகிஸ்தான் ராணுவத் தலைவர்கள் புகார்கூறி, கண்டனத்தை வெளியிட்டிருக்கின்றனர்.

தங்கள் உடம்பில் கடைசி துளிரத்தம் இருக்கும் வரை பாகிஸ்தானுக்காக சேவை செய்யதாங்கள் தயார் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

## வழக்கு விசாரணையின் போது திருமணம்!

லண்டன், மே 15—

ஒரு ஆபீஸில் புகுந்து கொள்ளையிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட பிரடெரிக் வில்லியம் தாம்ஸன் என்பவர் மீது வழக்கு விசாரிக்கப்படுகையில் தன் திருமணத்திற்காக சில மணி அவகாசம் வேண்டும் என்று எதிரி கோரினர்.

அப்படியே அனுமதி கொடுக்கப்பட்டு அருகிலுள்ள பதிவு ஆபீஸில் திருமணம் பதிவு செய்யப்பட்டது.

விவாகம் முடிந்த பின்பு மணக்கோலத்துடனேயே மணமகள் கோர்ட்டில் அமர்ந்து தன் கணவனுக்கு மூன்று மாத [illegible] பயிற்சி பெறும் சிறைத் தண்டனை விதிக்கப்படுவதை கேட்டாள்.

தன் கணவன் விடுதலை பெறும் தினத்தன்று சிறைவாசலில் காத்திருந்து எதிர்கொண்டழைக்கப் போவதாக அவள் கூறினள்.

(யுனேப்)

## ஆர்க்காட்டில் உரிமைப்போர்

### சர்வகட்சிக்கூட்டத்தில் கண்டனம்

ஆற்காடு, மே. 11—

ஆற்காடு ஊராண்மைக் கழக மைதானத்தில். சர்வகட்சிக்கண்டனப்பொதுக்கூட்டம் தோழர் ஏ. ரங்கசாமி தலைமையில் ஆரம்பமாகியது. தோழர்கள் ஏ. எல். சிதாராமன், ஆ மணிஎழிலன், த பொன்னம்பலர், இரண்யன், துரை, உக்கிரபாணி. ஏ. ஜி நாகரத்தினம், சுப்ரமணியம். து. இளங்குப்பன் ஆகியோர் ஊராண்மைக் கழகத்தார் கூட்டம் கூடும் உரிமையைத் கடை செய்வதை வன்மையாகக் கண்டித்து, சொற்பொழிவாற்றினர்கள். அநேக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இக்கூட்டத்தில் சோஷலிஸ்டுக் கட்சி, தி. மு. கழகம், திராவிடர் கழகம், வள்ளுவர் கழகம், திருக்குறள் கழகம், தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம், முதலிய கட்சிகள் கலந்து கொண்டன.

## அபூர்வசகோதரர்களுக்கு ஆபரேஷன்

டோரண்டோ, மே 15—

ஒன்றுக ஒட்டிக்கொண்டு பிறந்திருக்கும் இரட்டைக் குழந்தைகளை (6 மாதம்) ஆபரேஷன்செய்து இரண்டாகப் பிரிக்க சில சர்ஜன்கள் முயன்று வருகின்றனர்.

இந்த ஆபரேஷன் செய்வது மிகவும் கஷ்டமாம் ஏனெனில் குடல் இரு குழந்தைகளுக்கும் தனித்தனியாக இராமல், ஒரே குடல் மட்டும் தான் இருக்கிறது. இந்த ஆபரேஷன் நடந்தபின்பு குழந்தைகள் உயிருடன் இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனல் நிச்சயமாகக் கூறமுடியாதாம்.

இந்த ஆபரேஷன் முடிவை எதிர்பார்த்து கனடா மக்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர். ஆபரேஷன் செய்யப்படுவதும் போட்டோ எடுக்கப்படுமாம்.

(யுனேப்)

## கோள்களுக்குப் பயணம்

நியூயார்க், மே 15—

ஒரு நியூயார்க் வியாபாரி பிரயாண ஏஜென்ஸி ஒன்றை ஆரம்பித்திருக்கிறார். இந்த ஏஜென்ஸி செய்துள்ள விளம்பரத்தில் 1975-ல் இதர கோள்களுக்கு நான்கு "ஸ்பேஸ்" விமானங்கள் செல்லும் என்றும், ஞாயிற்றுக்கிழமை தவிர இதர நாட்களில் இந்த சர்வீஸ் நடைபெறும் என்றும் கட்டணம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதற்குள்ளாகவே சுமார் 200 பேர்கள் இந்த ஏஜென்ஸியிடம் தங்கள் ஸ்தானங்களை ரிசர்வ் செய்துவிட்டனர்.

## கொழுத்துவளரச்செய்ய வைடமின் பி-12

இரட்டிப்பாக வளரச் செய்யக்கூடியது என்று கருதப்படும் ஆரோமைஸின் என்ற மருந்துபற்றி டாக்டர்கள் இப்பொழுது ஆராய்ச்சிகள் நடத்திவருகின்றனர். வைடமின் பி-12 அதில் இருப்பதுதான் நன்கு வளரச் செய்வதற்கு உதவி செய்கிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு டன் தீவனத்தில் 5-பவுண்டு ஆரோமைஸின் சேர்த்தால், இதை உட்கொள்ளும் பன்றிகள் இரட்டிப்பாக பெருத்துவளருவதாகக் கூறப்படுகிறது.

## மதுரை மாநாட்டு வரவேற்புக் கமிட்டிக் கூட்டம்

மேற்படி வரவேற்புக் குழுக்கூட்டம் 30-4-50 பகல் 2-மணிக்கு திண்டுக்கல்லில் கூடி, கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது.

மாநாட்டுக்குத் தோழர் ஈ. வெ. கி சம்பத் அவர்களைத் தலைமைவகிக்கவும், தோழர் கே.கே. நீலமேகம் அவர்களைத் திறப்பாளராகவும் கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

மாநாட்டு வரவேற்புக்குழு தலைவர் தோழர் தா. ஆவுடையப்பன், சோளவந்தான். செயலாளர்கள்:— எஸ். முத்து, மதுரை. என். முத்து, திண்டுக்கல். பொருளாளர்:—இ. நாத்தான், நிலக்கோட்டை. விளம்பர அதிகாரி:— எம். அய்யாசாமி. தொண்டர்படைத் தலைவர்கள்:— ஆர். சேதுராமன், மதுரை. என். ஆர். அய்யாசாமி, வாடிப்பட்டி. இருளப்பன், அய்யம்பாளையம். வரவேற்புக்குழு உறுப்பினர்கள்:- தோழர்கள் கே. எஸ். ராஜமான், சி முத்திருளாண்டி (மதுரை) ச. பழனிபாண்டவர் (சோளவந்தான்) சி என். ஜெயராம் (வத்தலக்குண்டு) வெங்கடாசலம் (பழனி) முத்தலிபு (பெரியகுளம்) ஆறுமுகம் (தேனி) பி.பரமன் (கூடலூர்) நாகர்கனி (மேலூர்) முத்துமாரி, கு பொன்னையா (திருவாதவூர்) கே. நடராஜன் (பட்டிவீரன்பட்டி) எம் பெரியசாமி (போடி) சுப்பிரமணியம் (சின்னமனூர்) மாரெக்தினம், கோவில்பிள்ளை (நிலக்கோட்டை) ஏகநாதன் (உசிலம்பட்டி) ஜி லட்சுமணன், பி. ராஜ (திண்டுக்கல்) கோ. வெங்கடாசலம் (கல்வார்பட்டி) தருமர் (திருமங்கலம்) பி. வெங்கிடசாமி (வாடிப்பட்டி) எஸ். பி. ஆர். மலைச்சாமி (கொண்டயம்பட்டி) சின்னக்கணபதி (அளகாபுரி) கந்தசாமி (பாலமேடு) காந்தி (ஆண்டிப்பட்டி) கருப்பண்ணன் (சமயநல்லூர்) மற்றும் பலர்.

மாநாட்டுக்கு நான்கு தினங்கள் முன்புவரை, மாநாட்டுக் காரியாலயம், மதுரை அழகரடியில் இருக்கும். நான்கு நாள் இருக்கும்போது சோளவந்தானுக்கு மாற்றப்படும். மாநாட்டுச் சம்பந்தமாய்க் கடிதம் எழுதுவோர் 324 அழகரடி. மதுரை என்ற விலாசத்திற்கு எழுதவும் என, வி. உறுப்பினர் எம். அய்யாசாமி எழுதுகிருர்.

## விஜயவாடாவில் வெய்யில் கொடுமை

### 117·5 டிகிரி உஷ்ணம்

விஜயவாடாவில்தாங்கமுடியாத வெப்பம் ஏற்பட்டிருக்கிறது. மத்தியில் இரண்டொரு தினங்களில் சிறிது மழை பெய்தது தவிர, கடந்த 15 தினங்களாக 112 டிகிரி உஷ்ணம் ஏற்பட்டு வருகிறது. நேற்று 116 டிகிரி உஷ்ணம் இரவு வரையில் ஒரே அனல் காற்று வீசிக்கொண்டிருந்தது. இன்றும் அனல். காற்றுதான் 1948-ம் வருஷத்தில் நிகழ்ந்ததுபோல் இன்று உஷ்ணம் 117½ டிகிரி.

## பிரிட்டனில் மக்கள் பாதுகாப்புத் திட்டம் தயாராகிறது

—(0)—

### அதிகாரிகளுக்குச் சுற்றறிக்கை

லண்டன், மே 13—

ஆபத்து நேர்ந்தால் மக்கள் நகரத்தைவிட்டு வெளியேற வசதிகள் செய்து கொடுப்பதற்கான திட்டங்களைவகுக்க பிரிட்டிஷ் சர்க்கார் முயன்று வருகின்றனர். இது சம்பந்தமான விபரங்களைத் தருமாறு அதிகாரிகளை சர்க்கார் கேட்டிருக்கிறதாம்.

சுகாதார மந்திரி காரியாலய அதிகாரி ஒருவர் இதுபற்றி கூறியிருப்பதாவது:—நாட்டில் நிரந்தரமான தற்காப்பு வசதி ஏற்படுத்துவதற்காகவே இந்த யோசனை செய்யப்படுகிறது என்று கூறினர். அவர் மேலும் கூறியதாவது:—

அரசாங்கம் வெளியிட்டிருக்கும் சுற்றறிக்கையில், குடிமக்கள் தம் இருப்பிடங்களைக் காலி செய்வது, வீடில்லாதோர்க்கு ஆதரவு தருவது, தண்ணீர் வசதி. ஆம்புலன்ஸ் சேவை இன்ன பிற விஷயங்கள் பற்றி வழிவகைகள் காட்டப்பட்டிருக்கின்றன.

கடந்த போரின் போது எப்படி நகரங்களைக்காலி செய்யும் முறை மேற்கொள்ளப்பட்டதோ, அதே அடிப்படையில்தான் இந்தப் புதுத் திட்டமும் அமைக்துள்ளது." என்று கூறினர்.

"டெய்லி ஒர்க்கர்" பத்திரிகை இதுபற்றி ஒரு கட்டுரையில் கூறுகையில், "பெருத்த அளவில் குழந்தைகளையெல்லாம்வெளியேற்றுவதற்காகப் போடப்படும் திட்டமானது மிகவும் அதிர்ச்சியை உண்டு பண்ணுவதாகும்" என்று கூறுகிறது.

## வழுக்கை விழுவதை தடை செய்யலாம்

### ஆஸ்திரேலிய மங்கையின் கண்டுபிடிப்பு

பேர்த் (விமானத் தபால்):—

வழுக்கை விழுவதைத் தடை செய்ய முடியுமென ஓய்வுபெற்ற நர்ஸ் தோழியர் ஈ.எம். ஜோன்ஸ் மிகவும் நம்பிக்கையுடன் தெரிவிக்கிறார். இவர் சொந்தத்தில் தயார் செய்த ஒரு தைலத்தை இவரது கணவரது வழுக்கை மண்டையில் சில காலத்தின் முன் பூசினர். கணவரின் உச்சியில் ரோமங்கள் வளரத் தொடங்கின.

வாலிபத்தில் வழுக்கை விழுந்த ஒருவரைத் தேவை என்று இவர் விளம்பரஞ் செய்தார். மனுச்செய்தவர்களில் மூன்று ஆண்டுகளாக வழுக்கை விழுந்திருந்த 50 வயது இளைஞர் ஒருவரைத் தெரிந்தெடுத்து தோழியர் ஜோன்ஸ் தனது தைலத்தை அவரிடம் பரீட்சை செய்தார். 5வாரகாலசிகிச்சைக்குப் பின் இளைஞருக்குக் கால் அங்குல கனமுள்ள ரோமங்கள் வளர்ந்திருக்கின்றன.

## இட்லர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது என்பர் சிலர்!—மாறியே விட்டது என்பர் னங்களைக் கணைகளாகத் தொடுத்து, வஞ்சந் தீர்த்துக் கொள்ள நினைப்பதும், நீதியின்பாற்பட்டகண்டனமாகா. கண்டனத்தால் நல்ல பலன் விளைய்க் காண்டலே கருத்துடையோர் செயல்.

ஆனல், இன்றையத்தினம் காங்கிரஸ் ஆட்சியைக் கண்டிக்கும் பல பெரிய தலைகளிடம் இத்தகைய நல்ல கருத்தை எதிர்பார்க்கமுடிவதில்லை. எல்லாம் வெறும் நாடகமாகவே இருக்கின்றன. எனவேதான், எதேச்சதிகாரம் தாண்டவமாகிறது நாட்டில். இந்த நிலைமாறவேண்டும், இன்றேல் நிலைமை மோசமாகுமேயன்றி திருந்த வழியில்லை. ஆட்சியாளர்மீது போலி கண்டன அக்கணைகளை வீசுவோர் ஆட்சியாளரின் போக்குக்கு ஆக்கமளிப்பவர்களாவர்.

தோழர் பி. ஆர். தாஸின் கண்டனங்கள் ஓரளவுக்கு வரவேற்கக் கூடியனவாகக் காணப்படினும், கண்டனத்தின் அடிப்படையில் உயிர் இல்லை என்றே சொல்லவேண்டும். அவரது கண்டனங்கள் காங்கிரசிக்குப் புத்துயிர் ஊட்டும் முயற்சியாக காணப்படுகின்றனவேயன்றி; புதுமைக்கோ, புரட்சிக்கோ வழிகோல வல்லதாயில்லை.

## கிழக்குபாலஸ்தீனப் பொறுப்பு

### இராக் பிரதமர் எண்ணம்

கிழக்குப் பாலஸ்தீனத்தை ஜோர்டனுடன் இணைத்துக்கொண்டது பற்றி ஏற்பட்டுள்ள தகராறு,பாலஸ்தீன பிரச்னை தீர்க்கப்படும்வரை, கிழக்குப் பாலஸ்தீனம் அப்துல்லா மன்னரின் தர்மகர்த்த பொறுப்பிலேயே இருக்கட்டும் என்ற யோசனையை, இராக் பிரதமர் டி.ஜி.பி.க்ளே ஜோர்டன்மன்னர் அப்துல்லாவுக்கு தந்தி மூலம் தெரிவித்திருக்கிறார்.

அரபு ஐக்கியத்தின் அவசியத்தை உத்தேசித்து, இந்த யோசனையை மன்னர் அப்துல்லா ஏற்றுக்கொள்ளலாம் என்று, விஷயமறிந்த வட்டாரங்களில் கூறப்படுகிறது. இதனல் அரபுலீகின் கௌரவமும் காப்பாற்றப்படும் என்று தெரிகிறது

## சிறையிலிருந்து தப்ப வழி!

ஈட்டன் (ஒஹியோ) மே. 15-

இங்குள்ள சிறையில் இருந்த ஜான் அமெர்ஸன் பாலிஞ்ஜர் என்பவர், ஒருபுது முறையைக் கையாண்டு சிறையிலிருந்து தப்பிவிட்டார்.

மூன்று பேர்கள் சிறையிலிருந்து தப்பமுயல்வதாகவும், இவர் அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்தார். அந்தஇடங்களில் காவல் இரட்டிக்கப்படவே இவர் வேறுவழியாக கம்பி நீட்டிவிட்டார்.

# தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

### 18 - 5 - 50

**திருமழிசை** :—காஞ்சி. மணிமொழியார், இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், ஏ. எல். சி. சஞ்சீவி.

### 19 - 5 - 50

**காஞ்சிபுரம்** :—என். வி. நடராசன்

### 20—5—50

**அகரம்சேரி** :—இரா. நெடுஞ்செழியன்.

## தி. மு. க. பொதுக்கூட்டங்கள்

### கடையநல்லூர்

க. நல்லூர், மே 13—

27-4-50 மாலை மதுமலைச்சி மைதானத்தில் தோழர் துரைசாமி தலைமையின் கீழ், தோழர்கள் சொக்கலிங்கம், சண்முகம் காட்டுப்பண்ணை பொதுக் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதுபோது தோழர் எம். எஸ். இராமசாமி அவர்கள், தற்கால அரசியல் நிலை குறித்தும், செயலாளர்களின் எல்லை இல்லாத தொல்லைகளின் விளக்கமும், இந்தி மொழியின் ஏகாதிபத்தியத்தைக் கண்டித்தும் பேசினார். அடுத்து தோழர் க. அன்பழகன் எம். ஏ. அவர்கள், வள்ளுவரின் காமத்துப்பால் இன்று ஆரியத்தின் செயற்கையால் கலை இழந்து கண்டைன் பொலிவிழந்து உழலுகின்ற நிலைமை பற்றிப் பேசினார். கடைசியாக செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

### பொள்ளாச்சி

பொள்ளாச்சி, மே. 11—

7—5—50 மாலை தேர்நிலை வெளி மைதானத்தில், தி. மு. க சார்பில் ஓர் பொதுக்கூட்டம் தோழர் கு. க. கிருட்ணசாமி தலைமையில் ஆரம்பமாயிற்று. தோழர்கள் என். ராமானுஜம், செல்லமுத்து, ஆகியோர் பாட்டுப்பண்பாடினர். தலைவர் முன்னுரைக்குப்பின் தோழர் ராஜகோபால் அவர்கள் சிறிதுநேரம் பேசினார். அடுத்து தோழர் என். எஸ். சிவசுவாமி, அவர்கள் திராவிட நாட்டுப்பிரிவினையின் அவசியத்தை வலியுறுத்தி, அரசியல், பொருளாதார சமுதாயத்துறையில் தி. மு. கழகத்தின் கொள்கைகளை விளக்கிப் பேசினார். கடைசியாக, தோழர் இரா. சு. பங்கப்பழம் அவர்கள், மதம்மற்றற்ற சர்க்கார் என்று கூறிக்கொண்டு 'கும்பமேளா' வுக்கு 37 லட்சரூபாயைக்கொடுத்த காங்கிரஸ் சர்க்காரின் பித்தலாட்டத்தையும், காங்கிரஸ் சர்க்காரின் ஊழல்களை விளக்கி சுமார் 1 மணி நேரம் பேசிமுடித்தார். தலைவர்முடிவுரைக்குப்பின் இரவு 10 மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது.

### சென்பகராயநல்லூர்

சே நல்லூர், மே—9

கரிமாபட்டினம் இவ்விரு ஊர் தி. மு. க. கிளையின் சார்பில் 7-5-50 மாலை தோழர் எம். கே. டி. ஐ. பி. அவர்கள் தலைமையில் நடைபெற்றன் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் புலவர் காசிநாதன் சி. பி. சிற்றரசு ஆகியோர் சொற்பெருக்காற்றினார்கள். செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

### வேதாரண்யம்

வேதாரண்யம் மே 10—

செண்பகராயநல்லூர், கரியாபட்டினம், வாட்டாகுடி ஆகிய தி. மு. க. கிளையின் சார்பில் வேதாரண்யம் மேலவீதியில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று 8-5-50 நடைபெற்றது. தோழர் எம். கே. ஷாஜ பீ அவர்கள் தலைமையில், தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் சுமார் 2 மணி நேரம் சொற்பெருக்காற்றினார்கள். முடிவில் தோழர் அ. சண்முகம் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

### மங்கல நல்லூர்

ம. நல்லூர், மே, 7—

27-4-50-இல்லூர் கடைவீதியில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது தோழர் ஆர். நாராயணசாமியைத் தலைமை வகிக்கும்படி தோழர் ஆர் முத்துகுமாரசாமி முன்மொழிய தோழர் முத்தையன் வழிமொழிய, தோழர் ஆர். நாராயணசாமி அவர்கள் தலைமை வகித்து முன்னுரை ஆற்றினார். பிறகு தோழர்கள் வை மாணிக்கம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் தி. மு. க. கொள்கைகளை விளக்கினர்.

அடுத்துப் பேசிய தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் அரசியல் சமுதாயம், பொருளாதாரம் பற்றிப் பேசியபின், தோழர் வை. மாணிக்கம் அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது. செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

## செங்கற்பட்டு மாவட்ட

### தி. மு. கழக அமைப்புக் கூட்ட அழைப்பு

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகத் தேர்தல் கூட்டம் ஒன்று 19—5—50 வெள்ளி மாலை ஐந்து மணிக்கு, காஞ்சிபுரம் "திராவிட நாடு" நிலையத்தில் நடைபெறும்.

மேற்படி மாவட்டத்தில் இதுவரை அமைத்துள்ள கிளைக் கழகங்கள் ஒவ்வொன்றிலிருந்தும், இரண்டு பிரதிநிதிகள் வீதம் தேர்ந்தெடுப்பதுடன், அப்பிரதிநிதிகள் அனைவரும் மாவட்டத் தேர்தல் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளும் வகையில், செங்கற்பட்டு மாவட்ட கிளைக் கழக நிர்வாகிகள் உடன் ஆவன செய்ய வேண்டுகிறேன்

குறிப்பு:—செங்கற்பட்டு மாவட்ட கிளைக் கழகங்களின் பிரதிநிதிகளின் பெயர்கள் விவரம் முதலியவைகளையும் எனக்குக் கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டுகிறேன்.

என். வி. நடராசன்
செயலாளர்
அமைப்புக் குழு
தி. மு. கழக தலைமை நிலையம்


# முத்தமிழ் வளர்ச்சி மாநாடு

## மே 27, 28 சனி, ஞாயிறு நாட்களில் கோவையில் நடைபெறும்

இடம்:- ஆர். எஸ். புரம் நகராட்சி மன்ற உயர்நிலைப்பள்ளித் திடலில் அமைந்துள்ள "வள்ளுவர் பந்தல்"

★

**தலைவர்:-** புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

**திறப்பாளர்:-** நாவலர் ச. சோமசுந்தரபாரதியார் எம். ஏ., பி. எல்.

★

### இயல் அரங்கம்

சொற்பொழிவாளர்கள்:- சி. என். அண்ணாத்துரை, கா. அப்பாத்துரை, ஔவை சு. துரைசாமி, இராம. மீனாட்சிசுந்தரனார், இரா. நெடுஞ்செழியன், க. அன்பழகன், சி. பி. சிற்றரசு, மு. கருணாநிதி ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ப. கண்ணன், ஏ. கே. வேலன்

★

### இசை அரங்கம்

இசைவாணர்கள்:- நகைச்சுவை அரசர் என். எஸ். கிருஷ்ணன், சி. எஸ். ஜெயராமன், எம். எம். மாரியப்பா, லோகநாதன், டி. வி. நமசிவாயம்

★

### கூத்து அரங்கம்

## "சந்திரோதயம்" — — "நீதிதேவன்மயக்கம்"

நடிகர்கள் :—சி. என். ஏ., கே. ஆர். ராமசாமி, டைரக்டர் ஏ. எஸ். ஏ சாமி, டி. வி. நாராயணசாமி, ராஜேந்திரன், க. அன்பழகன், ஈ. வி. கே. சம்பத் ஈழத்தடிகள், மற்றும் சி. என். ஏ. குழுவினர்

வரவேற்புக் குழு உறுப்பினர் கட்டணம் ரூ. 5—0—0
பிரதிநிதிக் கட்டணம் .... ரூ. 2—0—0

சாப்பாடு தனி ஏற்பாடு

நுழைவுச் சீட்டுகள் தற்பொழுது கிடைக்குமிடம் ;—
8/20, ஸ்டார் பில்டிங், ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.

இப்படிக்கு,
வரவேற்புக் குழு உறுப்பினர்

குறிப்பு:—தமிழைக் காத்து, வளர்த்து, அதற்கு ஆக்கந்தேடும் அரும் பணியினை ஆற்றிவர, "இலக்கிய மா மன்றம்" (Literary Academy) என்ற பெரும் மன்றத்தை மாநாட்டில் நிறுவ முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. மா மன்றத்தில் பங்குகொள்ள விரும்பும் தமிழ் இலக்கிய புலமையுடையோர், கீழ்க்கண்ட முகவரிக்குத் தங்கள் முகவரியுடன் அறிவிக்க வேண்டப்படுகிறார்கள்.

மாநாட்டு நிகழ்ச்சியில் "கலை அரங்கம்" என்பதும் ஒன்று. கவிபுனையும் ஆற்றலுடையோர் "அழகின் சிரிப்பு" என்ற தலைப்பில் கவிதை புனைந்து 24-5-50-ம் நாளுக்குள் எமக்குக் கிடைக்கும்படி செய்தல் வேண்டும் மிக்குயர்ந்த கவிதைக்குப் பரிசு ஒன்று வழங்குவதோடு, சிறந்த கவிதைகளைக் கலையரங்கத்தில் பாடிக் காட்ட, கவிஞர்களுக்கு இடமும் அளிக்கப்படும்.

முகவரி :—இரா. நெடுஞ்செழியன், அமைப்பாளர். "இலக்கிய மா மன்றம்" 2/45 முத்துமாரிச் செட்டித் தெரு, மண்ணடி, சென்னை-1.


Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street, Madras-1.